00027

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
கல்விப் பீடம்
முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்ப கல்வித் துறை
கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக் கல்வி
இறுதிப் பரீட்சை

**EPU4534** – முன்பிள்ளை மற்றும் ஆரம்ப பிரிவு வயதினரிரையே பிரச்சினைகள் (சீராக்கல்)

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : **04/03/2023** நேரம்: பி.ப 01.30 – பி.ப 04.30

1. "சீராக்கல் பிரச்சினை" என்பதால் நீங்கள் கருதுவது யாது? வரைவிலக்கணத்துடன் விளக்குக.

2. முன்பிள்ளைப் பருவத்தில் பிள்ளைகளிடத்தே காணப்படக்கூடிய சீராக்கல் பிரச்சினை **ஐந்தினை (05)** எழுதுக.

3. பிள்ளைகளின் சீராக்கல் பிரச்சினைகளில் செல்வாக்கு செலுத்தும் பரம்பரைக் காரணிகளையும் சூழல் காரணிகளையும் விளக்குக.

4. 'விசேட கல்வித் தேவையுடைய பிள்ளைகள்' என்பதை வரையறுக்குக.

5. "உணர்வுப் பிரச்சினையுடைய பல பிள்ளைகள் விசேட தேவையுடையவர்கள்" **ஐந்து (05)** உணர்வுப் பிரச்சினைகளை எழுதுக.

6. பிள்ளைகளிடம் அனுபவமுள்ள பிரச்சினையான நிபந்தனைகளை ஏற்படுத்தக்கூடிய ஆபத்தான காரணிகள் **ஐந்தினை (05)** எழுதுக.

7. பயிற்சியின் மூலம் சீராக்கல் பிரச்சினைகள் உள்ள பிள்ளைகளிடம் விருத்திசெய்யக்கூடிய **மூன்று (03)** திறன்களை இனங்காண்க.

8. எல்பேட் பந்துற (Albert Bandura) **மூன்று (03)** அடிப்படை அவதானிப்பு கற்றல் முன்மாதிரிகளை இனங்கண்டார். அம் முன்மாதிரிகளை பெயரிடுக.

**(5x8=40** புள்ளிகள்)

## பகுதி II

9.

i. முன்பள்ளி, ஆரம்ப கல்வி ஆசிரியர் என்ற வகையில் சீராக்கல் பிரச்சினைகள் உடைய பிள்ளைகளிடம் நீங்கள் இனங்காணக்கூடிய ஐந்து (05) பிரதான இயல்புகளை உதாரணத்துடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. முன்பள்ளி ஆசிரியர் என் வகையில் நீங்கள் மேலே குறிப்பிட்ட இயல்புகளை இழிவளவாக்க எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை சிபாரிசுசெய்து விளக்குக.

(10 புள்ளிகள்)

10.

i. குடும்ப உறுப்பினர் என்ற வகையில் சீராக்கல் பிரச்சினையுடைய பிள்ளையிடம் நேரான தாக்கத்தினை எவ்வாறு ஏற்படுத்துவீரென விளக்குக.

(06 புள்ளிகள்)

ii. ஆசிரியர் என்ற வகையில் சீராக்கல் பிரச்சினையுடைய பிள்ளையிடம் நேரான தாக்கத்தினை எவ்வாறு ஏற்படுத்துவீரென விளக்குக.

(06 புள்ளிகள்)

iii. "பரம்பரை, சூழல் போன்ற காரணிகளால் சீராக்கல் பிரச்சினையுடைய பிள்ளைகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்." இக் கூற்றினைப் பற்றிக் கருத்துரைக்க.

(08 புள்ளிகள்)

11.

i. உள்ளடங்கல் கல்வியினைப் பற்றி குறிப்பொன்றினை முன்வைக்குக..

(10 புள்ளிகள்)

ii. விசேட தேவைகள் உள்ள பிள்ளைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் இருந்து விடுபட ஆசிரியர் உளவழிப்படுத்துநர் என்ற வகிபங்கில் எவ்வாறு உதவ முடியுமென பரிசீலிக்க.

(10 புள்ளிகள்)

12.

i. எரிக் எரிசனால் முன்வைக்கப்பட்ட பிள்ளையொன்றின் பிறப்பிலிருந்து பதினொரு மாதங்கள் வரையான சமூக உளவியல் கட்டங்களைக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

ii. எல்பேட் பந்துற (Albert Bandura) **மூன்று (03)** அடிப்படை அவதானிப்பு கற்றல் முன்மாதிரிகளை இனங்கண்டார். அம் முன்மாதிரிகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

13.

i. சீராக்கல் பிரச்சினைகள் உள்ள பிள்ளைகளுக்கு உதவுவதற்கு ஆசிரியர்கள் விருத்திசெய்துகொள்ளவேண்டிய திறன்கள் **பத்தினை** (10) பட்டியலிடுக.

(10 புள்ளிகள்)

ii. உள்ளடங்கல் கல்வியளிக்கப்படும் வகுப்பொன்றின் பொறுப்பாசிரியர் என்ற வகையில் நீங்கள் வழங்கக்கூடிய செயற்பாடொன்றை விளக்குக. எவ்வாறு நீங்கள் ஒவ்வொரு பிள்ளையையும் மதிப்பிடுவீர்.

(10 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*